## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்

**C.C.No. 03/2018**

2019ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி 8 - (PW8) ஆக காவல் உதவி ஆய்வாளர் திரு.தமிழரசன் என்பவரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.த.சிவக்கொழுந்து, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. தமிழரசன் | வயது | : | |
| த/பெ.(அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | ஜாதி | : | |
| மாவட்டம் | : | | | : | |

**18.07.2019**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெரம்பலூர் மாவட்டம் நெடுஞ்சாலை துறையில் ரோந்து காவல் வாகன எண்.2-ன் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.07.2017-ம் தேதி ஜெயங்கொண்டம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது சென்னை மடிப்பாக்கத்தை சேர்ந்த ரெங்கசாமியின் மகன் செல்வராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் ஜெயங்கொண்டம் காவல் நிலைய குற்ற எண். 216/2017 சட்டபிரிவுகள் 420, 379 இதசவின்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.7 ஆகும். மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பை ஆய்வாளரரிடம் சமர்பித்தேன்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

இல்லை.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்**

**C.C.No. 03/ 2018**

2019ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி 9 - (PW9) ஆக காவல் ஆய்வாளர் திரு.வேலுசாமி என்பவரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.த.சிவக்கொழுந்து, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. வேலுசாமி | வயது | : |
| த/பெ.(அ) க/பெ | : | | தொழில் | : |
| ஊர் | : | | சமயம் | : |
| வட்டம் | : | | ஜாதி | : |
| மாவட்டம் | : | | | : |

**18.07.2019**

**முதல் விசாரணை**

நான் தற்போது கரூர் மாவட்டம் வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 04.07.2017-ம் தேதி ஜெயங்கொண்டம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது ஜெயங்கொண்டம் சிறப்பு உதவி ஆய்வாளர் தமிழரசன் என்பவர் ஜெயங்கொண்டம் காவல் நிலைய குற்ற எண் 216/17 சட்டபிரிவு 420, 379 இதசவின்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்ததை புலன் விசாரணைக்கு எடுத்துகொண்டு சம்பவ இடம் சென்று மதியம் 12.45 மணிக்கு சம்பவ இடத்தில் சாட்சிகள் 1. ஜெய்சங்கர் 2. ஜெயராமன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். அவர் பதிவு செய்த மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.8 ஆகும். அந்த பார்வை மகஜரில் சாட்சிகளின் கையொப்பம் பெற்று அந்த சாட்சிளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் சாட்சிகள் செல்வராஜ், சுரேஷ், செந்தில், ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கில் சம்பவ இடத்தை பார்வையிட்டதில் இருந்தும் சாட்சிகளை விசாரணை செய்ததில் அடிப்படையில் வைத்தும் சம்பவம் உண்மை என் தெரியவந்ததால் 04.07.2017-ம் தேதி 17.00 மணிக்கு ஜெயங்கொண்டம் முதல் செந்துறை செல்லும் சாலை பிரிவில் எனது குழுவினருடன் வாகன தணிக்கை செய்தபோது அந்த சமயம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நடந்து வந்தவர் எங்களை பார்த்ததும் ஓட முயற்சித்தவரை பிடித்து விசாரணை செய்ததில் அவர் தன்னுடைய பெயர் சுந்தர் என்கிற சுந்தராஜ் வயது 24 தகப்பனார் பெயர் சுப்ரமணியன், காலணி தெரு, பிலாக்குறிச்சி என்ற விலாசத்தை சொல்லி ஜெயங்கொண்டம் காவல் நிலைய குற்ற எண்.218/17 சட்டபிரிவு 392 r/w 397 இதசவின் வழக்கின் குற்றத்தை ஒப்புகொண்டு தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் நீலமேகம், அழகுதுரை ஆகியோர் முன்பாக ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் ஜெயங்கொண்டம் பேருந்து நிலையம் அருகில் உள்ள எஸ்பிஐ ஏடிஎம் அருகில் இருந்தேன். அந்த ஏடிஎம்க்கு வந்த வயதான ஆண் நபர் ஒருவர் என்னிடம் பணம் எடுத்து தரச்சொன்னதால் அவர் சொன்ன ரசகிய எண்ணை பயன்படுத்தி பணம் எடுத்துகொடுத்தும் அவருடைய ஏடிஎம் கார்டை நான் வைத்துக்கொண்டு என்னிடம் இருந்த எடிஎம் கார்டை அவரிடம் கொடுத்துவிட்டேன் என்றும் அன்றே 28.06.2017-ம் தேதி ஜெயங்கொண்டம் சன்னதி தெருவில் உள்ள ஏடிஎம் சென்டரில் அந்த கார்டை பயன்படுத்தி முதல் தடவை 10,000/-ம் இரண்டாவது தடவையாக 9,200/-மும் பணம் எடுத்துக்கொண்டு

சென்னை சென்றும் ஜாலியாக செலவு செய்துள்ளதாக சொல்லியுள்ளார். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட ஆஜர் எதிரியை சாட்சிகளுடன் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கின் புகார்தாரர் செல்வராஜ் என்பவரை வரவழைத்தும் எதிரியை அடையாளம் காண்பிக்க சொல்லியும் விசாரணை செய்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கில் சாட்சிகள் மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் தமிழரசன் என்பரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து இறுதியாக புலன் விசாரணை முடித்து இவ்வழக்கின் ஆஜர் எதிரி மீது 10.10.2014-ம் தேதி 420, 379 இதசவின் படி குற்றி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

இல்லை.